**கண்காணிப்பு பொறியாளர் அலுவலகம், நீஆது,**
**நிலநீர்வட்டம், தரமணி, சென்னை.600 113.**

முன்னிலை: பொறி. ஆர். வில்வநாதன், எம்.இ.,
கண்காணிப்பு பொறியாளர், நீஆது. (கூ.பொ)
நிலநீர் வட்டம், சென்னை–113

*செயல்முறை ஆணை எண்.நி2/1903/2018/நாள்: 22.06.2021.*

பொருள்: பணியமைப்பு – த.நா.அ.ப.தொ – காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. ஆ. இராமசுப்பிரமணியன், உதவியாளர் மகள் திருமதி. இரா. மேகாதாரிணி, என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் – குறித்து.

பார்வை:

1. முதன்மைத்தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை.5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(4)/22221/2018/ நாள் 09.11.2018
2. தலைமைப்பொறியாளர், பொபது, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், சென்னை.113 அவர்களின் செயல்முறை ஆணை எண். இ2(4)/8255/2018 நாள் 26.11.2018.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.நி2/1903/2018 நாள் 05.12.2018
4. அரசு கடித எண் 3650/பி1/2020–6/நாள் 05.05.2021
5. தலைமைப்பொறியாளர், பொபது, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், சென்னை.113 அவர்களின் செயல்முறை ஆணை எண். இ2(4)/6159/2019/ நாள் 09.06.2021.

:o0o:

பார்வை 1ல் காணும் முதன்மைத்தலைமைப்பொறியாளர், (நீஆது) மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொபது சேப்பாக்கம், சென்னை–05 அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. ஆ. இராமசுப்பிரமணியன், உதவியாளர் மகள் திருமதி. இரா. மேகாதாரிணி, அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு இவ்வட்ட அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து பார்வை 2, 3 மற்றும் 4 ஆணைகளின்படி திருமதி. இரா. மேகாதாரிணி, அவர்களுக்கு மறுபணியமர்வு ஆணை வழங்கப்பட்டு இவ்வட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 10.12.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 10.12.2018 முற்பகல் முதல் பார்வை 4ல் காணும் அரசு கடித எண் 3650/பி1/2020–6/நாள் 05.05.2021ன்படியும் அரசாணை (நிலை) எண் 48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை நாள் 26.02.2021 பத்தி 3ல் அரசாணையின் பத்திகள் (5.1) மற்றும் (5.2)ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்த விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்துமாறு தெரிவித்துக்கொள்ளப்பட்டது. மேலும் அவ்வாணையினை செயல்படுத்த

Scanned with CamScanner

சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இளநிலை உதவியாளர்களுக்கு அதிகாரி செயற்பொறியாளர் ஆவார். (அரசாணை 2151 பொபது நாள்: 27.12.1988)

பத்தி 4ல் மேற்கண்ட அரசாணையின் பத்தி (5.1) மற்றும் (5.2)ன்படி பொதுப்பணித்துறைகளில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 10.12.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. ஆ. இராமசுப்பிரமணியன் என்பவரின் மகள் திருமதி. இரா. மேகாதாரிணி இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறைப்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பார்வை 4 மற்றும் 5 கடிதங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி இவ்வட்ட அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி. இரா. மேகாதாரிணி, அவர்கள் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 10.12.2018 முற்பகல் முதல் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்தும், தனியரை அப்பதவியில் 10.12.2018 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தினை தொடங்கவும் ஆணைகள் வழங்கப்படுகிறது. இவர் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டு ஆண்டு காலத்தில் தனது தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை 5ல் காணும் அரசு கடித எண் : 3650/பி1/2020-6/நாள் 05.05.2018 நாளிட்ட கடிதத்தின் அறிவுரைகளின்படி இவ்வாணை வழங்கப்படுகிறது.

ஒம்/பொறி.ஆர். வில்வநாதன்., 22.06.2021.
கண்காணிப்புப் பொறியாளர், நீஆது (கூ.பொ)

பெறுநர்
திருமதி. இரா. மேகாதாரிணி,
இளநிலை உதவியாளர்,
நிலநீர் வட்டம், சென்னை-113

/உ.ந.ப.அ.ப./

கண்காணிப்புப் பொறியாளர், நீஆது (கூ.பொ) சார்பில்.

23/6/21

Scanned with CamScanner